காரணத்தாலும் கடந்த மாதம் இந்த உஞ்சனையில் துவக்கப்பட்ட பிறகு இந்தத் தடை நீக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அந்தப் பகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 368, திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

368-

திருவட்டார் பாலத்தில் கைப்பிடிச்சுவர் கட்டுதல்

***19307-** திரு. இரா. அப்பு நடேசன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதியில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே திருவட்டாரில் கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு இரு ஓரங்களிலும் கைப்பிடிச்சுவர் கட்டாமல் இருப்பதால் பல வாகன விபத்துக்கள் நடந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கைப்பிடிச்சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மேற்படி இடத்தில் கைப்பிடிச்சுவருக்குப் பதிலாக ஒரு "போக்குவரத்துத் திட்டு" அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அதில் கைப்பிடிச்சுவர் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள், நன்றி. ஆனால் அந்தப் பாலம் கட்டி 4 வருடங்கள் ஆகின்றன. வருடந்தோறும் 4,5 ஆக்சிடென்ட்டுகள் அங்கே நடந்து எத்தனையோ பேர்கள் அங்கே இறந்திருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் இந்த வருடமே அதைக் கட்டித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கைப்பிடிச் சுவர் கட்டவேண்டும் என்று கேட்டார்கள். இப்படி வளைவாக இருக்கின்ற பகுதிகளிலே கைப்பிடிச்சுவர்களைக் கட்டுவதாலேயே விபத்துக்களைத் தவிர்க்கமுடியாது என்பதை நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே தான் கைப்பிடிச் சுவருக்குப் பதிலாக 'டிராபிக் மீடியன்' என்ற 'போக்குவரத்துத் திட்டு' என்ற ஒரு அமைப்பினை உருவாக்கவேண்டுமென்று அந்த விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பல இடங்களில் நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பு நடேசன் அவர்களுடைய பகுதியிலே உள்ள அந்தப் பாலத்திற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நம்முடைய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டே அந்தப் பணி எடுத்துச் செய்யப்படும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு வளைவாக இருக்கின்றது என்று அந்த அதிகாரிகள் கூறியிருப்பது சரியாக இல்லை. உண்மையிலேயே அது வளைவு இல்லை. நீளமாக, நேராகத்தான் இருக்கிறது. அதோடு சேர்ந்து ஒரு பாலம் ஐந்தாண்டுகளாக உபயோகச் சூன்யமாக இருக்கிறது. அதை ஏலம் போட்டுத் தருவதாகவும் அதிகாரிகள் போன வருடம் வாக்குறுதி கொடுத்தார்கள். இதுவரையில் அந்தப் பாலம் ஏலம் போடப்பட்டு அரசுக்குப் பணமும் வரவில்லை. அரசுக்கும் லாபம் இல்லை. அதை திருடர்கள்தான் திருடிக் கொண்டிருக்கிறார்கள். அது இரும்புப் பாலம். அதையெல்லாம் உடனடியாக ஏலம் போட்டு கைப்பிடிச்சுவர் கட்டித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பழைய இரும்புக் கதவுகளைப் பொறுத்தமட்டிலும், பாலங்களைப் பொறுத்த மட்டிலும், ஏலம் விடுகின்றபோது நம்முடைய தமிழ்நாடு கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷனுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு நாம் கொடுக்கிறோம், நம்முடைய அரசு நிறுவனம் என்ற காரணத்தினாலே. பொதுப்பணித் துறையைப் பொறுத்தமட்டிலும் தமிழ்நாடு ஸ்டீல்ஸிற்குத் தான் கொடுக்கிறோம். தனியார்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ

ஏலம் விடுவதில்லை. ஆகவேதான் இதையெல்லாம் ஒன்றாகச் சேமித்து மொத்தமாக ஏலம் விடுகிறபோது, தமிழ்நாடு கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பரேஷனுக்கு அல்லது தமிழ்நாடு ஸ்டீல்ஸ்க்கு கொடுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலேயே அவற்றையெல்லாம் ஒன்றாக ——தமிழ்நாடு முழுவதிலும் இருக்கின்ற இரும்புக் கதவுகளை ஒன்றாக ஏலம் விடவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு இந்தத் துறை நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சாலையினுடைய வளைவைப் பற்றிச் சொல்கிறபோது, அந்த வலது பக்கத்திலே வாகனங்கள் நுழைந்து செல்வதால் வலது பக்கத்திலே இந்த விபத்து ஏற்படுகிறது என்பதை அதிகாரிகள் குறிப்பிலே தெரிவித்திருக்கிறார்கள். அதற்காகத்தான் டிராபிக் மீடியன் என்ற போக்குவரத்துத் திட்டு அமைக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எது எப்படியிருந்தாலும் இந்த ஆண்டே செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறேன். உடனடியாக இந்த ஆண்டே நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 369, டாக்டர் எம். கருப்புசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் 370, திருமதி கே. மரியம் உல் ஆசியா; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

370-

அரவக்குறிச்சியில் முருங்கைக்காய்களை ஏற்றுமதி செய்யும் தொழிற்கூடம் அமைத்தல்

***24055-**திருமதி கே. மரியம் உல் ஆசியா:*

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சியில் முருங்கைக்காய்களை அடிப்படையாகக் கொண்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.